From,
V. Ambujam
D/o Late A.N. Krishna
Iyengar, advocate
Watrap

க்ஷேமம்.



No 1, Matha Nilayam,
V.O.C. Road,
Karaikudi.
Dtd: 10th June '57.

பிரியமுள்ள மாமாவுக்கு அம்புஜம்
தெண்டம் சமர்ப்பித்த விண்ணப்பம். இவ்விடம்
நாங்கள் யாவரும் க்ஷேமம். அவ்விடம் தங்களுடையவும்,
எச்சி அக்காவுடையவும், பெண்கள் பிள்ளை, பேரன்;
பேத்தி எல்லாருடைய க்ஷேமத்திற்கும் பதில் எழுதப்
பிரார்த்திக்கிறேன். நமக்குள் நல்லதற்கோ, கெட்டதற்கோ
இதுநாள் வரை ஒருவருக்கொருவர் கடிதமோ போக்கு
வரத்தோ இல்லாமல் போய்விட்டது. இது என் பிசகே.
நீங்கள் அழகப்பா காலேஜில் சயன்ஸ் கூடம் திறந்து
வைத்த போது, வந்து பார்க்க வேண்டும் என்று ஆசை.
இவரும், பிள்ளைகளும், ஊருக்கு, சொத்தை விற்கப்
போயிருந்தார்கள். அதனால் காலேஜிற்கு, வண்டியாய்
என்னால் வரமுடியவில்லை. அப்போது அனந்தராம
தீக்ஷிதருடைய ராமாயணப் பிரவசனம் நடந்து
கொண்டிருந்தது. நான் மறுநாள் தீக்ஷிதரை தரிசிக்கப்
போயிருந்த போது, தாங்கள் டாக்டர் சுப்ரமண்யம்
வீட்டிற்கு வந்திருந்ததாகவும், அவருக்கு அங்கே
பிக்ஷை என்றும் சொன்னார். அதைக் கேட்டு மனதிற்கு
ரொம்ப வருத்தமாக இருந்தது. நீங்கள் அங்கே வந்தி
ருந்தது தெரிந்திருந்தால், நான் அங்கு தங்களை
கண்டிருப்பேன். பார்க்க பாக்கியம் இல்லாமல் போய்
விட்டது. எனக்கு இன்னும் பழைய மைலாப்பூர்,
முண்டக்கண்ணியம்மன் கோயில் தெரு 11ம் நெ வீட்டில்
(A.N.K. வக்கீல்) நீர், நான், அப்பா, மாமா, அம்மா (லக்ஷ்மி)

எல்லாரும் இன்னும் அங்கே உட்கார்ந்திருப்பது போல் மனக்கண்ணில் ~~[illegible]~~ தோன்றுகிறது. மறுபடியும் பழைய நாள் வராதா, குழந்தையாகவே இருக்க மாட்டோமா, இப்பேர்ப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் ஆளாக வேண்டாமே என்று நினைத்து ஏங்கிக்கொண்டே இருக்கிறேன். எனக்கு வந்த கஷ்டங்களெல்லாம், உங்கள் காதிலும் விழுந்திருக்கும் என்று எண்ணுகிறேன். விவரித்து எழுதப் பிடிக்கவில்லை. போனது போக, இனி நடக்கும் வழியைத் தானே பார்க்க வேண்டும்?

என் பிள்ளை பெரியவன் சீமா சொந்தமாக சினிமா டாக்கீஸ் தொழிலும், அதோடுகூட யூனியனில் இன்ஸ்பெக்டராகவும் இருக்கிறான். அடுத்தவன் சம்பத்து L.E.E. படித்துவிட்டு, காரைகு காத்தான், அண்ணாமலை பாலிடெக்னிக்கில் லெக்சரராக இருக்கிறான். மூன்றாவது பையன் கிருஷ்ணன், பாபு என்று செல்லப்பெயர் - இவனுக்கு, அப்பா A.N. கிருஷ்ணய்யங்கார் பெயர் வைத்திருக்கிறேன். இவன் இந்த வருஷம் இண்டர், இரண்டாம் கிளாஸில் பாஸ் பண்ணியிருக்கிறான். First class ல் பாஸ் செய்வான், ஒருவித சிபார்சு இல்லாமல் B.E.ல் சேர்த்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், போதாத காலம் second class ல் பாஸ் பண்ணியிருக்கிறான்.

English 125/300 Sanskrit = 73/200.

Mathematics - 134/150 Physics = 107/150

Chemistry - 86/150

Total 525/950.

First classக்கு 45 மார்க் குறைச்சல்.
இங்கே எல்லோரும், நல்ல சிபார்சுக் கடிதம் இருந்தால், சேர்த்துக் கொள்வார்கள் என்று சொல்கிறார்கள். உங்களைத் தவிர, எனக்கு வேறு யாரைத் தெரியும். அதனால் தான் உங்களுக்கு எழுதியுள்ளேன். பழைய அம்மா, அப்பாவுக்காக, எனக்கு, நீங்கள், இந்த உதவியைச் செய்ய வேண்டும். இவனைப் படிக்க வைப்பதற்காகவே, வேறு ஊருக்கு போஸ்ட் மாஸ்டராகப் போகாமல், இந்த ஊருக்கு, சூப்பர்வைஸராகக் கேட்டுக் கொண்டு வந்தோம். இவன் நன்றாகப் படிக்கக் கூடியவன். Second class பாஸ் பண்ணினது ரொம்ப ஏமாற்றம். உங்களுடைய தயவினால் தான் இவன் B.E.ல் சேர வேண்டும். இந்த பெரு உதவியை எந்நாளும் மறக்க மாட்டேன். அவனும் இன்ஜினியரிங் காலேஜில் சேரத்தான் மிகுந்த ஆசையோடு இருக்கிறான். இந்த உதவியை, நீங்கள் எனக்காக இல்லாவிட்டாலும், A.N.K, லக்ஷ்மிக்காக மாமா மைனர் ராமசாமி ஐயங்காருக்காகவாவது செய்ய வேண்டும்.

மாமாவிடம் சொல்லியே தங்களுக்கு எழுத வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் ஆத்தில் எல்லாருக்கும், ஜுரம் வந்து, மதுரை போகமுடியாமல் போய்விட்டது. அதனால் தான் நானே எழுதுவோம் என்று எழுதுகிறேன்.

இந்த லெட்டரில் குற்றங்களைத் தள்ளி, குணத்தைக் கைக் கொ~~ள்ளுமாறு~~ண்டு, என்னை மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன். தங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கும்போது நான் இந்த லெட்டர் எழுதியுள்ளேன்.

ஆனால் தாங்கள், சிரமத்தைப் பாராது, தொந்தரவுக்காக என்னை மன்னித்து, சிபார்சு லெட்டரை அடுத்த தபாலில் அனுப்பும் படி பிரார்த்திக்கிறேன்.

பையன் பெயர் - V. Krishnan.

அவன் அப்பா பெயர் - S. V. Desikan B.A.

விலாசம் - Postal Supervisor
Karaikudi
S. Ry.

இப்படிக்கு தங்கள் உதவியை என்றும் மறவாத,

V. Ambujam

10/6.

Respected Sir,

I beg to introduce myself as the son in law of Late Sri. A. N. Krishna Iyengar, advocate, Watrap. I have not had the good fortune of paying my respects to you so far. I combine my humble prayers also, with those of Ambujam, to cause my boy to be admitted to the B. E. in the local Alagappa College of Engineering & Technology. I know that your honours magic word would do the needful there. Hoping to be excused for the trouble and favoured.

yours very affectionately
S. V. Desikan.

(Son of late D. V. Srinivasa iyengar [illegible] Watrap